**செய்தி வெளியீடு எண் : 134** **நாள் : 20.01.2023**

**பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும்போது, பயணிகளுக்கு சுகாதாரமற்ற மற்றும் தரமற்ற உணவு வழங்கிய வேல்ஸ் பயண வழி உணவகத்தில் அரசுப் பேருந்துகள் நின்று செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது – மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. சா.சி.சிவசங்கர் அவர்கள் நடவடிக்கை.**

சமீப காலமாக அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் நிறுத்தம் செய்யும் பயண வழி உணவகங்கள் மற்றும் கடைகளில் தரமற்ற உணவுகள் மற்றும் கூடுதல் விலைக்கு தின்பண்டங்கள் விற்பனை செய்யப்படுவது மற்றும் சுகாதாரமற்ற முறையில் கழிவறைகள் பராமரிக்கப்படுவது தொடர்பாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சா.சி.சிவசங்கர் அவர்களுக்கு வரப்பெற்ற புகாரின் அடிப்படையில், அவர்களின் உத்தரவின்படி சாலையோர உணவகங்களின் செயல்பாட்டினை கடந்த இரண்டு நாட்களாக போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்களால், திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

19.01.2023 அன்று போக்குவரத்துக் கழக உயர் அலுவலர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் போது, விக்கிரவாண்டி அருகே சாலைகள் இருபுறமும் உள்ள வேல்ஸ் உணவகம் பயணிகளுக்கு சுகாதாரமற்ற முறையில் தரமற்ற உணவு மற்றும் கூடுதல் விலைக்கு தின்பண்டங்கள் வழங்கியதை கண்டறியப்பட்டதன் அடிப்படையில், வேல்ஸ் உணவகத்தில் அரசுப் பேருந்துகள் நின்று செல்லும் உரிமம் ரத்து செய்யப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து, எதிர்வரும் காலங்களில், அங்கீகரிக்கப்பட்ட சாலையோர பிற உணவகங்களும் ஆய்வு செய்யப்பட்டு, குறைகள் கண்டறியப்பட்டால், அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in